டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
கல்யாண் ஜுவல்லர்ஸ்
agridoctor.in | 8.10.2025 புதன்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 090 - Madurai | Online Edition

# செயற்கை தொழில்நுட்ப நிர்வாகம் தொடர்பான ஐஐடி சென்னை நிறுவனத்தின் முன்மொழிவுகள்

புது தில்லி, அக்.7

இந்தியா மற்றும் வளரும் நாடுகளில் பாதுகாப்பான நம்பகத் தன்மையுடன் கூடிய நேர்மையான செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப நிர்வாகத்தை மேம்படுத்துவதில் ஐஐடி சென்னை கல்வி நிறுவனம் கவனம் செலுத்தி வருகிறது. இதன் ஒரு பகுதியாக செயற்கை நுண்ணறிவு நிர்வாகம் தொடர்பான மாநாடு ஐஐடி சென்னை வளாகத்தில் நேற்று (7.10.25) நடைபெற்றது.

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள இந்திய செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் தாக்கங்கள் குறித்த உச்சி மாநாட்டின் முன்னோட்டமாக இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த மாநாட்டில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப நிர்வாக கட்டமைப்புகள் தொடர்பான ஐந்து முன்மொழிவுகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் பாதுகாப்பு நம்பகத்தன்மை உள்ளடக்கிய வாய்ப்புகள் மற்றும் மனிதனை மையமாகக் கொண்ட அணுகுமுறை ஆகிய மூன்று முக்கிய அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. இவை கல்வி நிறுவனங்கள், ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள் மட்டுமின்றி கொள்கை வகுப்பாளர்கள், தொழில் நிறுவனங்களின் தலைவர்கள் ஆகியோருக்கும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அம்சமாகும்.

இந்த நிகழ்ச்சியில் காணொலி மூலம் கலந்துகொண்டு உரையாற்றிய தேசிய தகவல் மையத்தின் தலைமை இயக்குநர் அபிஷேக் சிங் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப நிர்வாக கட்டமைப்புகளுக்கான வரைவு கொள்கை வகுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதற்கான கட்டமைப்புகளை மேம்படுத்தும் வகையில் அரசு தவிர தொழில்துறையினர், கல்வி நிறுவனங்கள் மற்றும் சமூக அமைப்பு களும் பங்கேற்க முன்வர வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப நிர்வாக கட்டமைப்புகள் வளரும் நாடுகளுக்கு முன் மாதிரியாக இருக்கும் என்று அவர் கூறினார். மேலும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தால் ஏற்படும் தாக்கங்கள் குறித்தும் இந்த மாநாட்டில் விரிவாக விவாதிக் கப்பட்டதாக தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் உரையாற்றிய ஐஐடி சென்னை கல்வி நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் காமகோடி, எந்த ஒரு தொழில் நுட்பத்திற்கும் நன்மை, தீமை என்ற இரண்டு பக்கங்கள் உள்ளது என்று கூறினார். எனவே தொழில்நுட்பத்தை ஆக்கப் பூர்வமாக பயன்படுத்தும் வகையில் ஒழுங்குமுறை விதிகள் வகுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். இதுபோன்ற நவீன தொழில்நுட்பங்களுக்கான நிர்வாக கட்டமைப்பு களை வகுப்பது மிகப்பெரிய சவாலான பணி என்றும் அவர் தெரிவித்தார்.

# மண்புழு உரம் தயாரித்தல் பயிற்சிக்கு அழைப்பு

விருதுநகர், அக்.7

விருதுநகர் மாவட்டம், அருப்புகோட்டை வேளாண்மை அறிவியல் நிலையத்தில் மண்புழு உரம் தயாரித்தல் குறித்த 26 நாள் பயிற்சி நடைபெற உள்ளது. இந்தப் பயிற்சியானது தமிழக அரசின் நான் முதல்வன் திட்டத்தில், வெற்றி நிச்சயம் என்ற பிரிவில், இலவசமாக வழங்கப்பட உள்ளது. இந்த அக்டோபர் மாதம் 9 ஆம் தேதி முதல் நவம்பர் 8 ஆம் தேதி வரை நடைபெறும் மண்புழு உரத் தயாரித்தல் பயிற்சியில் கலந்து கொள்ளும் 25 நபர்களுக்கும் மதியம் உணவு, தேநீர் போன்றவை இலவசமாக வழங்கப்படும். கலந்து கொள்ளும் நபர்களின் வயது 35க்குள் இருக்க வேண்டும். எட்டாம் வகுப்பு படித்திருந்தால் போதுமானது. விருப்பமுள்ளவர்கள் இன்றே, திட்ட ஒருங்கிணைப்பாளர், வேளாண்மை அறிவியல் நிலையம், கோவிலாங்குளம், நேரிலோ அல்லது தொலைபேசி மூலமாக (94423 25720) தொடர்பு கொள்ளலாம். முதலில் வரும் 25 நபர்களுக்கு மட்டும் முன்னுரிமை வழங்கப்படும் என்று திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் செல்விரமேஷ் தெரிவித்துள்ளார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# இப்கோ நானோ விழிப்புணர்வு கருத்தரங்கம்



வேலூர், அக்.7

வேலூர் மாவட்டம், போஜனபுரம் கிராமத்தில் நானோ உரங்கள் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் வேலூர் மாவட்ட வேளாண் உதவி இயக்குநர் ஸ்டீபன் ஜெயக்குமார் மற்றும் குடியாத்தம் வேளாண் இணை இயக்குநர் உமாசங்கர் ஆகியோர் கலந்து கொண்டு தலைமை வகித்தனர்.இப்கோ கள அதிகாரி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, பல்வேறு பயிர்களில் நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பி, நானோ ஜிங்க், நானோ காப்பர், சாகரிகா மற்றும் இதர உரங்களின் பயன்பாடு குறித்து விளக்கினார். நானோ உரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் உற்பத்தி செலவு குறைந்து, மண் வளம் பாதுகாக்கப்படும் என்பதை விவசாயி களுக்கு எடுத்துக் கூறினார்.

மேலும், இரசாயன உரங்களின்அதிகப் பயன்பாடு மண் மாசுபாடு மற்றும் மண்வள குறைவை ஏற்படுத்தும் என்றும், அதற்கான சிறந்த மாற்றாக நானோ உரங்களை பயன் படுத்தலாம் என்றும் வலியுறுத்தினார். துல்லியமான முறையில் நானோ உரங்களை தெளிக்க இப்கோ கிசான் ட்ரோன் சேவையை பயன்படுத்தலாம் என்றார். நானோ உரங்களுடன் வேளாண் பூச்சிக்கொல்லி மருந்துகளையும் கலந்து தெளிப்பதன் மூலம் இடுபொருள் செலவுகளை குறைக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# உயிர்ம வேளாண்மை கண்காட்சி




தூத்துக்குடி, அக்.7

நமது விவசாயிகளின் வருமானம் குறையாமல், உடலுக்கு பாதிப்பு ஏற்படாமல் வேளாண் உற்பத்தி திறன் பெருக வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத் பேசினார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு திட்டம் – வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (SEEPERS-ATMA) அட்மா திட்டத்தின்கீழ் மாவட்ட அளவிலான விவசாயிகள் பெருவிழா, அங்கக வேளாண்மை (Organic Farming) கண்காட்சி மற்றும் கருத் தரங்கம் நேற்று (07.10.25) கிள்ளிகுளம், வ.உ.சிதம்பரனார் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத், தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் ஆட்சியர் தெரிவித்ததாவது : தமிழ்நாடு அரசு உணவு தானிய உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு திட்டங்களை வேளாண்மை–உழவர் நலத்துறையின் மூலம் செயல்படுத்தி வருகிறது. இயற்கை வேளாண்மை அல்லது உயிர்ம வேளாண்மை என்ற அடிப்படையில் இக்கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. பூச்சி கொல்லியின் பயன்பாடு மற்றும் அதன் விளைவுகள் குறித்து விவசாயிகளுக்கு தெளிவுபடுத்தப்பட்டு உள்ளது.

ஆரம்பகாலத்தில் பூச்சி கொல்லி மருந்து நல்ல முறைக்காக கண்டுபிடிக்கப்பட்டது. பிற்காலத்தில் பூச்சிகளை கட்டுபடுத்துவதற் காக தொடர்ந்து பூச்சி கொல்லி மருந்துகள் கட்டுபாடு இல்லாமல் அதிகமாக பயன்படுத்தப்பட்டு, இறுதியாக உணவிலும் விசத் தன்மை கலக்கப்படுகிற நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பல்வேறு சிக்கல்களை சந்தித்துக் கொண்டிருக்கின்றோம். பூச்சி களை கட்டுப்படுத்த முடியாது, மேலாண்மை தான் செய்ய முடியும் என்ற புரிதல் இக்கருத்தரங்கு மூலம் ஏற்படுத்தப் படுகிறது. தொடர்ந்து, பூச்சிக்கொல்லி மருந்துகள் பயன்படுத்தும் பொழுது மனிதனின் உடலிலும் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தும்.

எனவே, பூச்சிகளை கட்டுப்படுத்துவதற்காக அதற்கு இணையான இயற்கை உரங்களை கண்டுபிடித்து அதனை பயன்படுத்த வேண்டும். அதிலும் பூச்சிகளை முழுமையாக கட்டுப்படுத்த முடியாது.

1960 காலகட்டத்தில் நமது நாட்டில் உணவு பஞ்சம் ஏற்பட்டது. நமது உணவு தேவைக்காக பிற நாடுகளை எல்லாம் சார்ந்திருக்கக்கூடிய கட்டாயம் இருந்தது. எனவே, உணவு தேவைக்கான முதன்மை காரணத்தினால் இயற்கை வேளாண்மை என்ற முறையிலிருந்து மாறி செயற்கை உரங்கள் மற்றும் செயற்கை பூச்சிக் கொல்லி பயன்பாடு என்ற நிலைக்கு வந்தோம்.



பசுமை புரட்சி விளைவின் காரணமாக பல்வேறு ஆண்டுகளில் மென்மேலும் தீவிரமடைந்து, இறுதியாக பூச்சி கொல்லி மருந்து மற்றும் இரசாயன உரங்களை அதிகமாக பயன்படுத்துகின்ற ஒரு நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, அந்த காலகட்டத்தில் வேளாண்மையின் மீதிருந்த மனபான்மையின் காரணமாக நமது மக்கள் பசியுடன் பணிக்கு செல்லக் கூடாது, குழந்தைகளுக்கு முழுமையான உணவு கிடைக்க வேண்டும் என்ற முதன்மை நோக்கத்துடன், இன்றைய காலத்தில் பசியாற்றக்கூடிய அளவிற்கு போதிய அளவிலான உணவினை உற்பத்தி செய்கிறார்கள். ஆனால் அந்த உணவு தரமானதாகவும், எந்தவிதமான இரசாயன பொருட்களும் இல்லாமல் நமது உடலுக்கு பாதிக்காத வகையில் உள்ளதா என்பதை சிந்திக்க வேண்டும்? அதனை இயற்கை வேளாண்மை மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

வேளாண்மை மனப்பான்மை மாற்றங்கள் கடந்த 20 ஆண்டுகளாக தான் தொடங்கி இருக்கிறது. இதற்கு முன்னர் இயற்கை வேளாண்மையில் முன்னோடியாக இருந்த நம்மாழ்வார் அவர்களின் காலகட்டத்தில் தான் இயற்கை வேளாண்மை பற்றிய மிகப் பெரிய புரிதலை விவசாயத்தில் தொடர்ந்து ஏற்படுத்தி வந்தார்கள். அவரும் வேளாண்மையில் அறிவியல் பூர்வமான வேளாண் ஆராய்ச்சிகளை விஞ்ஞானி களுடன் தொடர்ந்து ஏற்படுத்தி, அந்த ஆராய்ச்சிகளை விவசாயிகளுக்கு கொண்டு சேர்க்க வேண்டும் என்ற அடிப்படையில் இக்கருத்தரங்கின் மூலம் உங்களுக்கு இயற்கை வேளாண்மை மற்றும் உயிர்ம வேளாண்மையை நோக்கி முன்னெடுத்து வருகிறோம்.

விவசாயிகள் உயிர்ம வேளாண்மைக்கான ஆலோசனை களையும் பின்பற்றிக் கொண்டு உணவு உற்பத்தி செய்கின்ற பொழுது எதிர்கால சந்ததியினர்களுக்கு உணவு உற்பத்தி செய்கின்ற திருப்தி கிடைக்கும். இயற்கை வேளாண்மை அல்லது உயிர்ம வேளாண்மையை பயன்படுத்துகின்ற பொழுது விளை பொருட்கள் குறைந்து, வருமானமும் குறைகின்ற நிலை ஏற்படுகிறது என விவசாயிகள் கூறுகின்றனர். இயற்கை வேளாண்மைக்கான திடீர் மாற்றம் என்பது மிகவும் கஷ்டமாக இருக்கும்.

படிப்படியாக இயற்கை வேளாண்மைக்கு மாறுவதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டும். காலத்தின் சூழ்நிலைக்கு ஏற்றவாறு புதிய நுட்பங்களை ஏற்றுக் கொண்டு, சாத்தியமான வியங்களை பின்பற்ற தொடங்கி, இரசாயன பயன்பாடு, பூச்சி கொல்லி பயன்பாடுகள் ஆகியவற்றை குறைத்து, உயிர்ம வேளாண்மையை விவசாயிகள் தொடர முடியும். உயிர்ம வேளாண்மையை தொடர்வதற்கான நுட்பங்களை பின்பற்றி, குறைவான இரசாயன உரங்கள் மற்றும் பூச்சி கொல்லி மருந்துகளை பயன்படுத்தி, அதிகமான மகசூல் தரக்கூடிய பூச்சிகளை தாங்கக்கூடிய ரகங்களை புதிதாக கண்டறிந்து விவசாயிகளுக்கு அளிக்க வேண்டும்.

அங்கக வேளாண்மைக்கு உகந்த புதிய இரகங்களை எடுத்து விவசாயிகளுக்கு தர வேண்டும். ஏற்கனவே உள்ள பாரம்பரிய விதை இரகங்களை எல்லாம் சேகரித்து, அதனையும் ஆராய்ச்சி செய்து, சிறந்த இரகங்களை விவசாயிகளுக்கு வழங்கும் பொழுது, நமது விவசாயம் புகழ் பெறுவதற்கு வாய்ப்பு உள்ளது.

இந்த ஆராய்ச்சி மற்றும் மேம்பாடுகளில் தமிழ்நாடு வேளாண்மை ஆராய்ச்சி பல்கலைக்கழகம் மிக முக்கிய பங்காற்றி வருகிறது.

கடந்த 50 – 60 ஆண்டு காலமாக மேற்கொண்ட பங்களிப்பின் காரணமாக தான் பல்வேறு விதமான புதிய இரகங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் கிடைத்திருக்கிறது.

அதன் முக்கிய பகுதியாக நமது மாவட்டத்தில் உள்ள கிள்ளிக்குளம் வேளாண் கல்லூரி முக்கிய பங்காற்றுகிறது. இன்றும் பல்வேறு விதமான புதிய இரகங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் உருவாக்குவதற்காக ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் இலக்குகளை நிர்ணயித்துக் கொண்டு, நமது பகுதிக்கு உகந்த பல்வேறு புதிய இரகங்களை உருவாக்கி தர வேண்டும்.

அது சுற்றுக்சூழலுக்கு உகந்த, இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்கின்ற வகையில் அமைய வேண்டும். அதன்மூலம் நமது விவசாயிகளின் வருமானம் குறையாமல், உடலுக்கு பாதிப்பு ஏற்படாமல் வேளாண் உற்பத்தி திறன் பெருக வேண்டும். இந்நிகழ்வின் மூலம் இயற்கை வேளாண்மையை குறித்த அனுபவங்களை இங்குள்ள விவசாயிகள் அறிந்து கொண்டு, மற்றவர்களுக்கு சிறந்த வழிகாட்டியாக திகழ வேண்டும்.

இக்கருத்தரங்கில் கலந்து கொண்டுள்ள மாணவர்கள் விவசாயிகளின் எதிர்கால வளர்ச்சிக்கு ஏற்ற ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன் என்று மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத், தெரிவித்தார்கள். இவ்விழாவில் தூத்துக்குடி மாவட்ட விவசாய பெருமக்கள் திரளாக கலந்து கொண்டனர். உணவில் தன்னிறைவு அடைவதுடன், மக்களுக்கு நஞ்சில்லா உணவு கிடைத்து, அதன் மூலம் நோய் நொடியற்ற ஒரு ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கவும், சுற்றுச்சூழலையும் மண்வளத்தையும் பாதுகாத்து வருங்கால தலைமுறையினருக்கு வழங்கும் நோக்கத்துடன் அங்கக வேளாண்மை விழிப்புணர்வு கண்காட்சி, கருத்தரங்கம் நடைபெற்றது.

இதில் வேளாண்மை மற்றும் வேளாண்மை துறை சார்ந்த பல்வேறு துறைகளின் திட்டங்கள் மற்றும் உயிர்ம வேளாண்மை தொடர்பான விவரங்கள் மற்றும் கோவில்பட்டி மைக்ரோகிரின் செயல்பாட்டாளர் மேனாள் வேளாண் கல்வி ஆசிரியர் கோ. சுரேஷ்குமார், மைக்ரோகிரின் வளர்ப்பு முறைகள் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டது. இந்த விவசாய பெருவிழாவில் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டார விவசாய பெருமக்களும் திரளாக கலந்துகொண்டு பயனடைந்தனர். விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்ட உயிர்ம வேளாண்மை இடுபொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டது விவசாயிகளிடம் பெரும் வரவேற்பை பெற்றது.

வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் மற்றும் துறை அலுவலர்கள் மூலம் உயிர்ம வேளாண்மை குறித்து விளக்கங்கள் அளிக்கப்பட்டது. விவசாயிகள் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் மற்றும் அங்கக வேளாண்மை செய்யும் முன்னோடி விவசாயிகளின் அனுபவப்பகிர்வு ஆகியவை விவசாயி களுக்கு உந்து சக்தியாக இருந்தது. உயிர்ம வேளாண்மை தொடர் பான விவரங்கள் கொண்ட பிரசுரம் மாவட்ட ஆட்சியரால் வெளியிடப் பட்டு, விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் வேளாண்மை இணை இயக்குநர் இரா.பெரியசாமி, வேளாண்மை துணை இயக்குநர் (உழவர் பயிற்சி மையம் மற்றும் உழவர் நலம்) மனோரஞ்சிதம், தோட்டக்கலை துணை இயக்குநர் சுந்தரராஜன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) மோகன்தாஸ் சௌமியன், செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை மகேஷ், கிள்ளிகுளம் வ.உ.சி வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், முதல்வர் தேரடிமணி, அரசு துறைச் சார்ந்த அலுவலர்கள், விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# பிரதம மந்திரி பயிர் காப்பீடு செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு

சேலம், அக்.7

சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டாரத்தில் விதைப்பு முதல் அறுவடை வரை உள்ள பயிர் காலத்தில் மக்காச்சோளம், நெல், பருத்தி போன்ற பயிர்களுக்கு வறட்சி, வெள்ளம், புயல், சூறாவளி காற்று போன்ற இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் மகசூல் இழப்பிற்கு பயிர் காப்பீட்டுத் தொகை பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டம் மூலம் வழங்கப்படும் என வேளாண்மை உதவி இயக்குனர் மோகன சரிதா தெரிவித்துள்ளார்.

அறிவிக்கை செய்யப்பட்ட குறுவட்டங்களில் உள்ள பட்டாதாரர் மற்றும் குத்தகைதாரர் விவசாயிகள் அனைவரும் இத்திட்டத்தில் தகுதியானவர்கள் ஆவர்.

விவசாயிகள் முன்மொழிவு படிவத்துடன் சிட்டா, அடங்கல், நடப்பில் உள்ள சேமிப்பு வங்கி கணக்கு அட்டை நகல், ஆதார் அட்டை நகல் போன்ற ஆவணங்களுடன் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள், வணிக வங்கிகள் மற்றும் பொது இ சேவை மையங்கள் மூலம் உரிய பிரிமிய தொகையை செலுத்தி பயிர் காப்பீடு செய்ய கேட்டுக் கொண்டுள்ளார். மக்காச்சோளம் பயிருக்கு ஏக்கருக்கு ரூ.482 பருத்திக்கு ரூ.650 நெல் பயிருக்கு ரூ.568 பிரிமிய தொகையாக நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது. பிரீமியம் செலுத்த கடைசி நாள் பருத்தி மற்றும் மக்காச்சோளம் பயிருக்கு 31.10.25, நெல் பயிருக்கு 15.11.25 என அறிவிக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார். மேலும் விபரங்களுக்கு சம்பந்தப்பட்ட உதவி வேளாண்மை அலுவலர் களையோ அல்லது கெங்கவல்லி மற்றும் தம்மம்பட்டி வேளாண்மை விரிவாக்க மையத்தையோ தொடர்பு கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்.



**Rithvik Pipe**

IS 4985 : 2021 | IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW | isha | POWERGRID | BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# அழிந்து வரும் அரிய வகை உயிரினங்களை காப்பாற்ற தமிழக அரசு மேற்கொள்ளப்போகும் நடவடிக்கை என்ன? தெரியுமா?

அழிவின் விளம்பில் பல விலங்குகள் இருந்தாலும், உலக இயற்கை பாதுகாப்பு மன்றத்தின் (I.U.C.N) சிவப்பு பட்டியலிட்ட விலங்குகள் தான் சிங்கவால் குரங்கு, சென்னை முள் எலி, வரிக்கழுதை புலி மற்றும் கூம்பு தலை மாஹசீர்மீன் ஆகிய 4 உயிரினங்களும் மிகமிக குறைவான எண்ணிக்கையில் அழிவை நோக்கி உள்ளது. அவற்றை காப்பாற்ற தமிழக அரசு ஒரு கோடி செலவில் முன்னோடி திட்டத்தை தொடங்கி உள்ளது. அழிவை நோக்கி உள்ள உயிரினங்களை பற்றியும் அதனுடைய முக்கியத் துவத்தை குறித்து பார்ப்போம்.

**1) சிங்க வால் குரங்கு**

இது பெரும்பாலும் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் காணப் படும். இந்த குரங்குகளை 'சோலை மந்தி' இனத்தை சார்ந்த முதனிகளாகும் . இந்த மந்திகளின் வெளிபுற தோல் மயிர்கள் மின்னும். கரு நிறத்தைக் கொண்டதால் கருங்குரங்கு என்றும் இதனுடைய வால் சிங்கத்தின் வால் போன்று இருப்பதால் இதனை ஆங்கிலத்தில் (LION-TAILED MACAQUE) என்று அழைக்கப்படு கின்றது. மேலும் சங்க இலக்கியத்தில் இதனை 'நரைமுக ஊகம்' என அறியப்படுகிறது. மாறிவரும் உணவுப் பழக்கம் காரணமாக இந்த குரங்குகள் அழிவின் விளம்புக்கே தள்ளப்பட்டுள்ளன. தற்போது குறைந்த எண்ணிக்கையில் 3000-3500 மட்டுமே உள்ளதாக தரவுகள் உள்ளன. வரையறுக்கப்பட்ட வனப் பகுதியிலே வாழ்கிறது. களக்காடு பாபநாசம் மலைப்பகுதி, நீலகிரி, பொள்ளாச்சி முதுமலை பகுதியில் காணப்படுகின்றன. இவை பொதுவாக கூச்ச உணர்வு கொண்டவை.

**2) முள்ளெலி (HEDGE HOG)**

இதனை ஆங்கிலத்தில் முட்காட்டு எலி என்று அழைக்கப் படுகின்றது. இவ்வகை விலங்குகள் 'பெருச்சாளி' போன்ற உருவத்தையும் உடம்பு முழுக்க முள்ளம் பன்றியை போல முள்ளும் உள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் இது 80%அழிந்து விட்டது. இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை கிராம மக்கள் இதனை நெய்யுடன் சமைத்து சாப்பிட்டால் கக்குவான் இருமல்

காணாமல் போய்விடுவதாக கூறுகிறார்கள். இவை காடுகள் அழிப்பு, காட்டுதீயால் இந்த உயிரினம் வாழ்விடத்தை இழந்து அழிந்து வருகின்றன. இரவு நேர மறைவு வாழ்க்கை முறை கொண்டது.

**3) வரிக்கழுதை புலி (STROPED HYENA)**

வேகமாக அழிந்து வரும் உயிரினமாகும். இதனுடைய உடலில் உள்ள கோடுகள் வரிகள் போல இருப்பதால் இதற்கு வரிக்கழுதை புலி என்று அழைக்கப்படுகின்றன. முழுமையாக இருட்டில் மட்டுமே உலா வரும். சூரிய உதயத்திற்கு முன்னதாக தன்னுடைய குகைகளுக்கு போய்விடும். இயற்கை தோட்டியாகவும் இருக்கும் வரி கழுதை புலி நோய்களை கட்டுப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆனால் முதுமலை பள்ளத்தாக்கு பகுதியில் விரைவான சரிவை எதிர் கொள்கிறது.

**4) மஹாசீர் மீன்கள் (MAHSEER FISH)**

மோயார் ஆற்றில் ஒரு காலத்துல ஏராளமாக இந்த கூம்பு தலை மீன்கள் காணப்பட்டது. இப்போது அணைக்கட்டு அழிவு காரண மாக வும் மீன் பிடிக்கும் நடவடிக்கையின் காரணமாகவும் இவை மிக அரிதாகவே உள்ளன. இந்த மீன் மத்திய பிரதேசத்தின் மாநில மீன் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஒரு கோடி நிதியில் இந்த 4 உயிரினங்களுக்கு பாரமரிப்புக்கு எந்த எந்த அளவு நிதி ஒதுக்கீடு?**

1) சிங்க வால் குரங்கு பாதுகாப்புக்கு 48.20 லட்சம் ஒதுக்கீடு.

2) சென்னை முள்ளெலிக்கு 20.50 லட்சம் ஒதுக்கீடு.

3) வரிக் கழுதை புலிக்கு 14 லட்சம் ஒதுக்கீடு.

4) மாஹசீர் மீன்களை பாதுகாக்க 17 லட்சம்.

**எதற்காக இந்த நிதி பயன்படுத்தபட போகிறது தெரியுமா?**

இந்த நிதி ஒதுக்கீடு வாழ்விடங்களை கண்காணிக்கவும், பாதுகாப்பான இனப்பெருக்க மையம் அமைக்கவும் மற்றும் சிங்க வால் குரங்கு மற்றும் வரிக்கழுதை புலிக்கான வன இருப்பை அதிகரிக்கவும் மக்களிடம் இவை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், முன்னணி வன ஊழியர்களுக்கு பயிற்சியும் வழங்கப்படும். மாஹசீர் மீன்கள் அதிகரிக்க இயற்கையாகவே வசிப்பிடத்திலே வளர்ப்பு இனப்பெருக்கத்தை ஏற்படுத்திட இந்த நிதி ஒதுக்கப்பட்டு இவற்றை அழிவிலிருந்து பாதுகாக்கபட தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

காக்கை குருவி எங்க ஜாதி என்று பாடிய பாரதியார் போல இந்த உலகம் மனிதர்களுக்கு மட்டுமே அல்ல அனைத்து சிறிய பெரிய உயிரினங்களுக்கும் வாழ உரிமை உண்டு என்பதை நாம் மறந்து விடக்கூடாது. அவைகளை வாழ வைப்போம், வாழ விடுவோம் என இந்த வன விலங்கு உயிரின வார விழாவில் உறுதி எடுப்போம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



# அங்கக விதை நேர்த்தி முறைகள் மற்றும் பயன்கள்

அங்கக வேளாண் முறையில், மண்ணின் பௌதீக, இராசயன மற்றும் உயிரியல் பண்புகள் மேம்பட்டு மண்வளம் மேம்படும். இதனால் பயிர் வளர்ச்சிக்கு உகந்த எல்லா சத்துக்களும் கிடைப்பதால், விளைச்சல் பெருகுவதோடு, தரமான விளை பொருள்களும் கிடைக்கும். பொதுவாக, பயிர் விளைச்சலானது விதைப்பிற்கு தேர்ந்தெடுக்கப்படும் விதைகளின் தரத்தைப் பொறுத்துள்ளது.

தரமான விதைகள் மற்றும் மேம்பட்ட வேளாண் தொழில்நுட்பங்களை கையாள்வதால், சுமார் 40 சதவிகிதம் அதிகரித்த விளைச்சலை பெறலாம். அங்கக விதை உற்பத்திக்கு, சாதாரண விதை உற்பத்திப் போலவே சில தனிப்பட்ட தொழில்நுட்பங்களைக் கையாள வேண்டும்.

**விதை நேர்த்தி :** பொதுவாக, அங்கக விதை உற்பத்தியில் விதை நேர்த்திக்கு உயிர் உரங்கள், தாவர இலைக் கரைசல்கள், இலைப்பொடிகள், பஞ்ச காவியா மற்றும் உயிர் கட்டுப்பாட்டுக் காரணிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தலாம்.

| வ. எண் | அங்கக விதை நேர்த்தி முறைகள் | பயன்கள் |
|---|---|---|
| 1. | விதைகளை கோமியத்தில் ஊற வைத்தல் | விதை முளைப்பு மற்றும் வேர் வளர்ச்சியை துரிதப்படுத்துகிறது |
| 2. | களிமண் விதைப் பூச்சு | விதை முளைப்பு மற்றும் வேர் வளர்ச்சியை துரிதப்படுத்துகிறது |
| 3. | ட்ரைகோடெர்மா மற்றும் பேசில்லஸ் சப்டிலிஸ் | வேர் சம்பந்தமான நோய்களை கட்டுப்படுத்துகிறது |
| 4. | சீமை அகத்தி பட்டை கரைசல், வசம்பு பொடி கரைசல் | விதை மூலம் பரவும் நோய்கள் மற்றும் சாறு உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துகிறது |
| 5. | எருக்கு இலைக்கரைசல் | நெல்லித் தண்டு துளைப்பானை கட்டுப்படுத்துகிறது |
| 6. | அரளி இலைக்கரைசல் | வெங்காயத்தில் நுனி கருகல் நோயைக் கட்டுப்படுத்துகிறது |
| 7. | புங்கம் விதைக் கரைசல் | சாறு உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துகிறது |

| | | |
|---|---|---|
| 8. | டிரைகோடெர்மா விரிடி 4 கிராம்/கிலோ | காய்கறிப் பயிர்களில் பூஞ்சாண நோய்களை கட்டுப்படுத்துகிறது |

**பல்வேறு பயிர்களுக்கு பரிந்துரைக்கப்படும் அங்கக விதை நேர்த்தி முறைகள்**

| வ. எண் | பயிர் | விதை நேர்த்தி முறைகள் |
|---|---|---|
| 1. | நெல் | விதைப்பிற்கு முன் நெல் விதைகளை பஞ்சகாவ்யா வில் 30 மணி நேரம் ஊறவைத்தல் அல்லது நெல் விதைகளை 20 சதவிகிதம் வசம்பு கரைசலில் (500 கிராம் / பவுடர் / 2.5 லிட்டர் / தண்ணீர்) 30 நிமிடங்கள் ஊற வைத்து பின்பு காடா துணியில் கட்டி வைத்தல் |
| 2. | கொண்டைக் கடலை | விதைகளை 20 சதவிகிதம் புதினா இலை கரைசலில் கரைசலில் 12 மணி நேரம் ஊறவைத்து விதைத்தல் அல்லது ஒரு கிலோ விதைகளை மஞ்சள் (50 கிராம்) மற்றும் வசம்பு (15 கிராம்) பவுடரில் 10 மில்லி கலந்து 10 நிமிடங்கள் கழித்து விதைத்தல் |
| 3. | பயிறு வகைப் பயிர்கள் | விதைகளை டிரைக்கோடெர்மா விரிடி 4 கிராம்/கிலோ என்றளவில் விதை நேர்த்தி செய்து விதைத்தல் |
| 4. | மக்காச் சோளம் | விதைகளை 2 சதவிகிதம் பஞ்சகாவ்யா கரைசலில் 6 மணி நேரம் ஊறவைத்து விதைத்தல் |
| 5. | கம்பு மற்றும் ராகி | விதைகளை 2 சதவிகிதம் பஞ்சகாவ்யா கரைசலில் 6 மணி நேரம் ஊறவைத்து விதைத்தல் |
| 6. | காய்கறி வகைகள் | விதைகளை (விரிடி 4 கிராம்ஃகிலோ டிரைக்கோ டெர்மா விரிடியில் விதை நேர்த்தி செய்து விதைத்தல். விதைகளை 20 சதவிகிதம் வசம்பு கரைசலில் (ஒரு பங்கு கரைசலை 5 பங்கு தண்ணீருடன் கலத்தல்) 20 நிமிடங்கள் ஊறவைத்து விதைத்தல் |

அங்கக வேளாண்மையைக் கடைப்பிப்பதன் மூலம் இயற்கை ஆதாரங்களையும், மண்வளத்தையும், பாதுகாத்து, சுற்றுச்சூழல் மாசுபாட்டைத் தவிர்க்கலாம். எனவே, அங்கக வேளாண்மையைப் பின்பற்றி தரமான பாதுகாப்பான உணவையும், மாசற்ற சுற்றுச்சூழலையும் நம் வருங்கால சந்ததியினருக்கு அளிப்பது நமது கடமையாகும்.

மேற்கண்ட இந்த தகவல் திருவாரூர் மாவட்டத்திற்கான தஞ்சை சரக விதைப் பரிசோதனை அலுவலர், து.சிவவீரபாண்டியன், திருவாரூர் விதைப்பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் கா.புவனேஸ்வரி மற்றும் வேளாண்மை அலுவலர் சே.சிவசக்தி ஆகியோர் தெரிவித்துள்ளார்கள்.

# ஜவ்வரிசியின் வரலாறு – ஓர் பார்வை



தென்னிந்தியாவில் பாயசத்திற்கும், மராட்டியத்தில் கிச்சடி உணவு தயார் செய்வதற்கும் மற்றும் மேற்கு வங்கத்தில் ஊட்டச்சத்து மிகுந்த உணவாக பயன்படுத்தபடுபவை ஜவ்வரிசி ஆகும். ஜவ்வரிசியின் முதன்மை தாயகம் இந்தோனேசியா ஆகும். அங்குள்ள 'மெட்ரோசைலான் ஸாகு' என்ற ஒரு வகை பனை மரத்தின் பதநீரைக் காய்ச்சும்போது இறுதியில் மாவு போன்ற ஒரு பொருள் கிடைக்கும். இந்த மாவை சிறு, சிறு உருண்டைகளாக திரட்டி ஜவ்வரிசி தயாரிக்கப்படுகிறது. இதன் உண்மையான பெயர் சேகோ ஆகும்.

இவை ஜாவா தீவில் இருந்து இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்பட்டதால் 'ஜாவா அரிசி' என அழைக்கப்பட்டு பிறகு அந்த சொல் மறுவி 'ஜவ்வரிசி' என ஆகிவிட்டது. முதலில் ஜவ்வரிசி இறக்குமதி செய்யப்பட்டு பரவலாகப் புழக்கத்தில் இருந்தது. இரண்டாம் உலகப் போர் தொடங்கிய பிறகு அனைத்து பொருட்களின் இறக்குமதிக்கும் தடை வந்தபோது ஜவ்வரிசியையும் இறக்குமதி செய்ய முடியாமல் போனது. இதை போல் அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மரிக்கன் மாவு என அழைக்கப்பட்ட மைதா மாவுக்கும் திண்டாட்டம் வந்தது.

இந்நிலையில் சரியான நேரத்தை பயன்படுத்தி கொண்ட சேலத்தை சேர்ந்த மாணிக்க செட்டியார் கேரளாவில் இருந்து குச்சிக் கிழங்கை வாங்கி மாவாக்கி மைதாவிற்கு மாற்று பொருளாக விற்றார். இவரது முயற்சி வெகுவாக வெற்றி பெற்றது. இந்நேரத்தில் மலேசியாவை சேர்ந்த ஜவ்வரிசி வியாபாரி போப்பட்லால் ஷா என்பவர் மாணிக்க செட்டியரை சந்தித்து ஜவ்வரிசி சம்பந்தமாக கலந்துரையாடினார். மாணிக்கம் செட்டியார் தயாரித்து வந்த குச்சிக்கிழங்கு மாவைத் தொட்டிலில் இட்டு அதைக் குலுக்கிப் பார்த்தார் போப்பட்லால் ஷா. அந்த மாவு குருணை, குருணையாகத் திரண்டது. அந்தக் குருணைகளை ஒரு பாத்திரத்தில் இட்டு வறுத்தார். அது ஜவ்வரிசி போல மாறி உள்ளது. இவ்வாறு தான் குச்சிக் கிழங்கு ஜவ்வரிசி உருவானது. இதன் பின்னர் மாணிக்க செட்டியார் ஜவ்வரிசி தயாரிப்பிலும்



வெகுவாக ஈடுபட்டார். இத்தொழிலிலும் நல்ல வெற்றி கண்டார். இந்த வியாபாரம் 1943-ம் ஆண்டில் பிரபலம் அடைந்தது. பிறகு இந்த தொழில் சேலத்தை மையமாகக் கொண்டு வளர்ச்சி பெற்றது.

ஆனால் 1944-ல் இதற்கு தடை வந்தது. பிறகு இந்த தடை நீங்கியது. இப்படியாக குச்சிக் கிழங்கு மாவிலிருந்து தயாரிக்கப் பட்ட ஜவ்வரிசி உற்பத்தி பெருகியது. வெளிநாட்டு ஜவ்வரிசிக்கும், குச்சிக் கிழங்கு ஜவ்வரிசிக்கும் சுவை அளவில் வித்தியாசம் இருக்காது. மேலும் 1950 பிறகு இந்தியா அரசு உள்ளூர் ஜவ்வரிசியை ஊக்குவிக்கும் நோக்கில் வெளிநாட்டு ஜவ்வரிசியை தடை செய்தது. இதுபோன்ற பல தடைகளுக்கு பின் குச்சிக் கிழங்கு மாவால் தயாரிக்கப்படும் ஜவ்வரிசிக்கு அங்கீகாரம் கிடைத்தது.

தகவல் : **இரா.ஜெயசங்கரமூர்த்தி, (முதுகலை வேளாண்மை), வேளாண் ஆலோசகர், கைபேசி எண் : 89404 75344, Email : agrijay102@gmail.com**

# பருத்தியில் நோய்க் கட்டுப்பாடு

வேர் அழுகல் நோய், வாடல் நோய், இலைப்புள்ளி, தயிர்ப்புள்ளி, காய் அழுகல், பாக்டீரியா கருங்கிளை மற்றும் நச்சுயிரி நோய் போன்றவை பருத்தியைத் தாக்கும் முக்கியமான நோய்கள் ஆகும்.

● க்ளோரோதலோனில் (அ) கார்பென்டாசிம் பூஞ்சானக் கொல்லியை ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் என்ற விகிதத்தில் விதை நேர்த்திச் செய்து விதைக்க வேண்டும்.

● டிரைக்கோடெர்மா விரிடி ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் அல்லது பேசில்லஸ் சப்டிலிஸ் 10 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். விதைத்த 90 நாட் களுக்குப் பிறகு ஓர் எக்டருக்கு 2.5 கிலோ டிரைக்கோடெர்மா விரிடி (அ) பேசில்லஸ் சப்டிலிஸ்-ஐ 250 கிலோ தொழு உரத் துடன் கலந்து இட வேண்டும். பாதிக்கப்பட்ட செடி மற்றும் அதனை சுற்றியுள்ள செடிகளின் வேர்ப்பகுதியில் 0.1 சதவிகிதம் கார்பன்டசிம் கரைசலை ஊற்ற வேண்டும்.

● இலைப்புள்ளி நோயைக் கட்டுப்படுத்த, விதைத்த 60 வது நாள் செடியின் மீது எக்டருக்கு காப்பர் ஆக்சிக் குளோரைடு 2.5 கிலோ அல்லது மேன்கோசெப் 2 கிலோ வீதம் தெளிக்க வேண்டும். நோயின் தீவிரத்திற்கு தக்கவாறு 15 நாள்கள் இடைவெளியில் 2-3 முறைகள் வரை இம்மருந்தைத் தெளிக்கலாம்.

● பாக்டீரியா இலைக்கருகல் நோய் பாக்டீரியாவினால் உண்டாகிறது. இந்நோயைக் கட்டுப்படுத்த அடர் கந்தக அமிலத்தை ஒரு கிலோ விதைக்கு 100 மி.லி என்ற அளவைக் கொண்டு விதையில் உள்ள பஞ்சை நீக்க வேண்டும். கார்பாக்சின் அல்லது ஆக்ஸிகார்பாக்சின் 2 கிராம்/கிலோ விதைக்கு பயன்படுத்த வேண்டும். கார்பாக்சின் 37.5 சதவிகிதம் WS 300 கிராமுடன் இரண்டு கிலோ காப்பர் ஆக்ஸி குளோரைடு என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும்.





● பருத்தியில் ஏற்படும் குறைபாடுகளில் மிகவும் முக்கிய மானது செவ்விலை நோயாகும். மக்னீசியச் சத்துக் குறைபாடு செவ்விலை நோய்க்கு முக்கியமான காரணமாகும். இந்நோய்ப் பருத்தி விதைத்த 50 முதல் 60 நாட்களில் தொடங்கும்.

இதனால் இலைகள் சிவப்பு நிறத்துடன் காணப்படும். 0.5 சதவிகிதம் மக்னீசியம் சல்பேட் கரைசலுடன் 1 சதவிகிதம் யூரியா கரைசலைத் (1 லிட்டர் நீரில் 5 கிராம் மக்னீசியம் சல்பேட்டும், 10 கிராம் யூரியாவும் கரைக்க வேண்டும்) தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

இவ்வாறு சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் தமிழ்செல்வன் தெரிவித்து உள்ளார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# ஆதிதிராவிட விவசாயிகள் மானியத்தில் சொட்டுநீர் பாசனம் அமைக்கலாம்

## வேளாண்மை இணை இயக்குநர் அழைப்பு

புதுக்கோட்டை, அக்.7

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள சிறு குறு விவசாயிகள், ஆதிதிராவிட விவசாயிகள் உள்ளிட்ட அனைவரும் நுண்ணீர் பாசனம் அமைத்திட மானியம் பெற்று பயன்பெறலாம் என வேளாண்மை இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி ஆலோசனை தெரிவித்துள்ளார்.

**பாசனநீர் சேமிப்பு**

சொட்டுநீர்ப் பாசனத்தின் முக்கியமான சிறப்பம்சம் பாசனநீர் சேமிப்பு ஆகும். மற்ற பாசன முறைகளைக் காட்டிலும் சொட்டுநீர்ப் பாசனத்தில் அதிக அளவில் நீர் சேமிக்கப்படுகின்றது. பயிரிடப் பட்டுள்ள பரப்பளவில் 30 முதல் 40 விழுக்காடு மட்டுமே பாசனம் பெறுவதன் மூலமும், வாய்க்கால் வழி நீர் விரயம் முற்றிலும் தவிர்க்கப்படுவதன் மூலமும், ஆழ்நிலைக் கசிவினைக் குறைப் பதன் மூலமும் பாசனநீர் 50 முதல் 60 விழுக்காடு வரை சேமிக்கப்படுகின்றது. மேலும், நீர் பயன்பாட்டுத் திறன் அதிகரித்து அதிக விளைச்சல் கிடைக்கிறது.

**உர பயன்பாட்டில் சிக்கனம்**

சொட்டுநீர்ப் பாசனம் மூலம் திரவ உரங்கள், நீரில் கரையக் கூடிய உரங்களை வெஞ்சுரி (Ventury), பிளஞ்சர் (யபிளஜஉஜுளஷெ) நீரேற்றும் கருவிகளின் உதவியுடன் பாசன நீரில் கலந்து உரங்களைப் பயிரின் வேர்ப்பாகத்தில் நேரடியாகக் கொடுக்கலாம். இம்முறையில் பயிரின் உரத்தேவை 25 விழுக்காடு வரை குறைவதுடன் உர பயன்பாட்டுத் திறன் அதிகரித்து கூடுதல் விளைச்சலைப் பெறமுடியும். பயிரின் தேவைக்கேற்ப உரத்தை பலமுறை பிரித்து இடவும் சாத்தியமாகின்றது. பாசன நீரும், உரமும் தொடர்ந்து வேர்ப்பகுதியில் பயிருக்கு கிடைப்பதால் பயிரின் வளர்ச்சியானது நடவு முதல் அறுவடை வரை சீராக இருப்பதனால் விளைச்சல் அதிகரிக்கின்றது.

**உப்பு நீரைப் பாசனத்திற்கு பயன்படுத்தலாம்**

மற்ற பாசன முறைகளில் பாசனம் செய்ய இயலாத உவர்ப்புத் தன்மைக் கொண்ட பாசன நீரையும் சொட்டுநீர்ப் பாசனம் மூலம்

மிகச் சிறந்த முறையில் பயன்படுத்தலாம். மிகக் குறைந்த அளவு நீர்ப் போக்கில் நீண்ட நேரம் நீர்ப் பாய்ச்சப்படுவதால், நீரில் கரைந்துள்ள உப்புக்கள் நீர் ஈரப் பகுதியின் வெளிச்சுற்றுக்குத் தள்ளப்படுகின்றன. எனவே, இந்த உப்புக்கள் பயிரின் நீர் உறிஞ்சும் அழுத்தத்தையோ, சவ்வூடு அழுத்தத்தையோ பாதிப்பதில்லை. மேலும், மற்ற பாசன முறைகளில் பயிர் வளர்ச்சிக்கு இடையூறு உண்டாக்கும் களர் உவர் நிலங்களிலும் சொட்டுநீர்ப் பாசனம் மூலம் சிறப்பான முறையில் பயிர் சாகுபடி மேற்கொள்ள இயலும்.

### அனைத்து மண் வகைகளுக்கும் ஏற்ற பாசன முறை

மணற்பாங்கான பூமி, மழை குறைவான பகுதிகள், சரிவான பகுதி, பாசன முறைகளில் பயிர் சாகுபடி மேற்கொள்ள இயலாத பகுதி போன்ற நிலங்களுக்கு சொட்டுநீர்ப் பாசனம் சிறந்த முறை யாகும். அழுத்தம் ஈடு செய்யும் சொட்டுவான்கள் மூலம் மேடு பள்ளமான நிலங்களுக்கு கூட பாசனம் செய்ய இயலும். மேலும், மிக இலேசான மணலில் கூட அதிக நீர்ப்போக்கு சொட்டுவான்கள் உதவியால் 0.3 முதல் 0.5 மீட்டர் இடைவெளியில் பாசனம் செய்யலாம்.

### குறைவான களை வளர்ச்சி

பயிர்ச் சாகுபடிப் பரப்பில் 30 முதல் 40 விழுக்காடு மட்டுமே ஈரமாக்கப்படுவதால் களைகளின் வளர்ச்சி பெருமளவில் கட்டுப் படுத்தப்படுகின்றது. இதனால் களை எடுக்க தேவையான கூலி ஆட்களின் செலவு முழுமையாக குறைகின்றது.

### மனித சக்தி சேமிப்பு

நடைமுறையில் உள்ள பாசன முறைகளைக் காட்டிலும் சொட்டுநீர்ப் பாசனத்தின் மூலம் பாசனம் செய்ய 25 முதல் 30 சதம் மனித உழைப்பு சேமிக்கப்படுகின்றது. மேலும், இம்முறையில் நிலத்தின் மேற்பாசன முறைக்கு தேவைப்படும் அளவு சமன் செய்யவும், வரப்புகள், பாசன வாய்க்கால் அமைக்கவும் தேவை இல்லாததால், ஆட்களின் தேவை குறைவதோடு சாகுபடிக்கு கிடைக்கும் நிலப்பரப்பும் அதிகரிக்கின்றது.

### பூச்சி, பூஞ்சாண தாக்குதல் குறைவு

நடைமுறையில் உள்ள பிற நீர்ப்பாசன முறைகளுடன் ஒப்பிடுகையில் சொட்டு நீர்ப்பாசன முறையில் பூச்சி, பூஞ்சாணங்களின் தாக்குதல் மிகவும் குறைவாக உள்ளதென அறியப்பட்டுள்ளது.

இத்துடன் சொட்டுநீர்ப் பாசன முறையைக் கொண்டு மிக அதிகமான பரப்பினை சிறுபகுதிகளாக வரையறை செய்து கொண்டு தொடர்ச்சியாகப் பாசனம் செய்யும் வகையில் கணினிகளின் உதவியுடன் தன்னியக்கம் செய்திடவும் வாய்ப்புள்ளது.

தற்போது வேளாண் பயிர்களில் சொட்டுநீர் பாசனம் அமைத்திட சிறு குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியமும் வழங்கப்படுகிறது.

ஆதிதிராவிட விவசாயிகள் இத்திட்டத்தில் பதிவு செய்து பயன்பெற முன்வர வேண்டும் என வேளாண்மை இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி ஆலோசனை தெரிவித்துள்ளார்.




# உலக பருத்தி தினத்தை (அக்டோபர் 7) முன்னிட்டு பருத்தியில் அதிக மகசூல் பெற சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் அறிவுரை

உலகப் பருத்தி தினம் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 7-ம் தேதி அன்று கொண்டாடப்படுகிறது. இந்த நாள் பருத்தியின் பொருளாதார முக்கியத்துவம், அதன் பல்துறை பயன்பாடுகள், மேலும் விவசாயிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் வாழ்வாதாரத்தை வழங்கும் அதன் பங்கை உலக அளவில் அங்கீகரிக்கும் வகையில் கொண்டாடப்படுகிறது.

**பருத்தியில் பூ மற்றும் காய்கள் உதிர்தல் - மேலாண்மை முறைகள்**

பருத்தியில் பூ மொட்டுகள் உதிர்வது இயற்கையான நிகழ்வு தான், எனினும் அளவுக்கு அதிகமாக உதிர்ந்தால் விளைச்சலை பாதித்து விடும். எனவே, இதன் காரணிகளை ஆராய்ந்து ஒருங்கிணைந்த முறையில் மேலாண்மை செய்து உயர் விளைச்சல் பெறலாம்.

**பருத்தியில் பூ மற்றும் காய்கள் உதிர்வதற்கான காரணங்கள்**

- தண்ணீர் பற்றாக்குறை அல்லது வறட்சி
- கூடுதல் பாசனம் அல்லது அதிக மழை
- வினையியல் குறைபாடு
- சத்துப் பற்றாக்குறை
- பூச்சி /நோய் தாக்குதல்
- மகரந்தச் சேர்க்கையில் குறைபாடு

பருத்தியில் பூ மற்றும் காய்கள் உதிர்தலுக்கு 'ஊட்டச்சத்து' அல்லது 'ஹார்மோன்கள்' அல்லது இரண்டும் கலந்த காரணங்கள் என்ற கருத்துக்கள் நிலவுகின்றன.

**மேலாண்மை உத்திகள்**

**வளர்ச்சி ஊக்கி தெளித்தல்**

பருத்தியில் வினையியல் காரணங்களால் பூக்கள், காய்கள் உதிர்ந்தால் வளர்ச்சி ஊக்கியை இலை வழித்தெளிப்பு செய்வது மிகச் சிறந்தது.

நாப்தலின் அசிடிக் அமிலம் என்ற வளர்ச்சி ஊக்கியை 40 பி.பி.எம் (1 லிட்டர் தண்ணீரில் 40 மில்லி கிராம் என்ற அளவில்) விதைத்த 60 மற்றும் 90-ம் நாட்களில் ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில் கலந்து மாலை நேரங்களில் கைத்தெளிப்பானால் தெளிக்க வேண்டும்.

**பருத்தி பிளஸ் தெளித்தல்**

இது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் தயாரிக்கப் பட்டு விற்பனை செய்யப்படுகிறது. இது பருத்திக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களும், வளர்ச்சி ஊக்கிகளும் கலந்த தூள் போன்ற கலவையாகும். இதனைத் தெளிப்பதால் பூ மற்றும் காய்கள் உதிர்வது குறைந்து காய்கள் முழுமையாக வெடித்து சீரான அறுவடைக்கு உதவும். ஒரு ஏக்கருக்கு 2.5 கிலோ பருத்தி பிளஸை 200 லிட்டர் தண்ணீரில் கரைத்து காய்பிடிக்கும் பருவத்தில் கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

**ஊட்டச்சத்து கரைசல் தெளித்தல்**

தேவைக்கேற்ப காய்பிடிக்கும் தருணத்தில் டி.ஏ.பி இரண்டு சதம் (ஒரு லிட்டர் தண்ணீரில் 20 கிராம்) + பொட்டாசியம் குளோரைடு ஒரு சதம் (ஒரு லிட்டர் தண்ணீரில் 10 கிராம்) கலந்த கரைசலைத் தெளிக்க வேண்டும்.

**மற்ற மேலாண்மை முறைகள்**

வறட்சி மற்றும் நீர்ப் பற்றாக்குறையைத் தவிர்த்து அளவான நீர்ப்பாசனம் மேற்கொள்ள வேண்டும். பூக்கும், காய் பிடிக்கும் மற்றும் காய் வளர்ச்சி ஆகிய முக்கியப் பருவங்களில் மண்ணில் ஈரப்பதம் குறைந்து விடாமல் தேவையான அளவு நீர்ப்பாய்ச்ச வேண்டும். அதிக மழை பெய்யும் காலங்களில் தண்ணீரை சுத்தமாக வடித்து விட வேண்டும். பூச்சி மற்றும் நோய் (குறிப்பாக காய்ப்புழுக்கள்) தாக்குதல் எனில் ஒருங்கிணைந்த முறையில் உடனடியாகக் கட்டுப்படுத்த வேண்டும். மண் பரிசோதனைக்கேற்ப பரிந்துரைக்கப்பட்ட அளவு தேவை யான நேரத்தில் பேரூட்ட மற்றும் நுண்ணூட்ட உரங்கள் இட வேண்டும். சூரிய ஒளி இலைகளின் மீது நன்கு படும்படியாக தேவை யான அளவு பயிர் இடைவெளி விட்டு சாகுபடி செய்ய வேண்டும்.

எனவே பருத்தியில், பூக்கள், காய்கள் உதிர்வதைத் தடுத்து நல்ல பலன் பிடிக்க வளர்ச்சி ஊக்கி, பருத்தி பிளஸ் அல்லது ஊட்டச்சத்துக் கரைசல் தெளித்து அதிக விளைச்சலும் கூடுதல் வருமானமும் பெறலாம். மேற்கண்ட தகவலை வேளாண்மை அறிவியல் நிலை யத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜா பாபு (91717 17832/0431 296285) தெரிவிக்கின்றார்.

# அனைவருக்கும் தேவையே! ஜோதிட ஆலோசனைகள்!!

# அகத்தியர் ஆஸ்ட்ரோ சென்டர்



வாட்ஸப் மூலம் ஜோதிடம் மற்றும் தீர்வுகள்

**DOCTOR OF ASTROLOGY**

**பா.இளங்கோவன்**

**M.Sc., MBA, D.Astro, Phd.,**

**ஜோதிட எண் கணித, வாஸ்து நிபுணர்**



13 ஜி, மருதமலை ரோடு, ஏ.ஒன்.சிப்ஸ் எதிரில் பாப்பநாயக்கன் புதூர், கோவை - 641 041

**தொடர்புக்கு 98420 07125**

ஜோதிடம், எண் கணிதம், கைரேகை, வாஸ்து திருமணப் பொருத்தம், நிறுவனப் பெயர் வைத்தல், அதிர்ஷ்டக் கல், விவாகரத்துப் பெற்றவர்கள், பெற உள்ளவர்கள் இல்லத்திற்கே வந்து கட்டணத்துடன் ஜோதிட ஆலோசனை தருகிறோம்.







குழந்தையின் கல்வி மற்றும் எதிர்காலம்
இரத்தினக் கற்களுக்கு சிறப்பு ஆலோசனை
அதிர்ஷ்டம் பெற, வெளிநாடு செல்ல மற்றும் தொழில் வாய்ப்பு ஆலோசனை
திருமணமாகாத பெண்களுக்கு வரன் வரும் திசை மற்றும் அஷ்டவர்க்க துல்லிய ஆலோசனை

- ஒரு குடும்பத்தில் 5 நபருக்கு மேல் ஜோதிடம் பார்த்தால் ஒருவருக்கு இலவச ஜோதிடம்
- ஜோதிடம் கற்க ஆன்லைனில் ஜோதிட வகுப்பு
- மாதம் ஒரு முறை கோவையில் ஜோதிடரைச் சந்திக்க வாய்ப்பு
- உங்கள் இல்லத்தில் அனைத்து விசேஷங்களுக்கும் சிறப்பு ஆலோசனை



**நீங்கள் உலகில் எந்தப் பகுதியில் இருந்தும் மேற்கூறிய தேவைகளுக்கு வாட்ஸ் ஆப் எண் : 98420 07125 மூலம் பயனடையலாம்.**

# விதைநேர்த்தி செய்திடுவோம் விளைச்சல் திறன் பெருக்கிடுவோம் – பயிற்சி



விருதுநகர், அக்.7

விருதுநகர் மாவட்டம், விருதுநகர் வட்டாரம், தாதம்பட்டி கிராமத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மூலம் 2025-2026 ஆம் ஆண்டு விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின்கீழ் 6.10.25 திங்கள்கிழமை அன்று அனைத்து பயிர்களுக்கும் விதைநேர்த்தி நாற்று நேர்த்தி, தெளிப்பு முறை, சொட்டு நீர் வழி இடும்முறைகள் குறித்த பயிற்சி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

வேளாண்மை உதவி இயக்குனர் கமிலஸ் லீமாரோஸ் அரசின் மானியத் திட்டங்கள் எடுத்துக்கூறி பயிற்சியை துவங்கி வைத்தார். உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வக வேளாண்மை அலுவலர் கா.அரிபுத்திரன் விதை நேர்த்தி தொழில்நுட்பங்கள், மக்காசோளம் பயிரில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு, உயிரியல் காரணிகள் பயன்பாடு குறித்து பயிற்சி மற்றும் செயல் விளக்கங்கள் செய்து காண்பித்தார்.

மக்காச்சோள வயல் சூழல் ஆய்வை விதை முளைப்புப் பருவத்தில் இருந்தே செயல்படுத்த வேண்டும். விதை முளைப்பு முதல் பயிர் வளர்ச்சிப் பருவம் வரை (3-4 வாரங்கள்) படைப்புழுவின் தாக்குதல் இருந்தால் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம். மக்காச்சோளப் பயிரினைத் தாக்கும் படைப்புழுவினை ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளைப் பயன்படுத்தி புழுவினை கட்டுப்படுத்தி விவசாயிகள் நஷ்டத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென வேளாண் அலுவலர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதன்படி, படைப்புழு தாக்குதலை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்த வேண்டும். இல்லையெனில் புழுவின் தாக்குதல் தீவிரமாகிப் பயிர்ச்சேதம் மற்றும் மகசூல் இழப்பு ஏற்பட்டு இதனால் விவசாயிகளுக்குப் பொருளாதார நஷ்டம் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, விவசாயிகள் வேளாண் துறையினர் பரிந்துரையின்படி, ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளைப் பயன்படுத்திபடைப்புழு பாதிப்பை கட்டுப்படுத்திடலாம்.

படைப்புழு தாய் அந்துப் பூச்சியானது முட்டை குவியல்களைப் பெரும்பாலும் இலையின் அடிப்பகுதியில் இடுகின்றன. முட்டையிலிருந்து வெளிவரும் புழுக்கள் இலையின் அடிப்பகுதியினைச் சுரண்டித்தின்று சேதத்தை பயிரில் விளைவிக்கும். இதனால் இலைகள் பச்சை நிறத்தை இழுந்து வெண்மையாகக் காணப்படும். இரவு நேரங்களில் அதிகச் சேதத்தை விளைவிக்கக்கூடியது. மூன்றாம் நிலையிலிருந்து ஆறாம் நிலை வரையிலான புழுக்கள் இலையுறையினுள் சென்று பாதிப்பை உண்டாக்கும்.

படைப்புழுவை இயற்கையாகவே கட்டுப்படுத்த பலவிதமான இயற்கை எதிரிகள் உள்ளன. இயற்கை ஒட்டுணிகள் மற்றும் இரைவிழுங்கிகள் ஆகியவற்றை வயல்களில் அதிகப்படுத்துவதற்கு மக்காச்சோளத்தை சுற்றிலும், 3 வரிசை துவரை, எள்மற்றும் பயறுவகை பயிர்களான தட்டைப்பயிறு ஆகிய பயிர்களை விதைக்க வேண்டும். படைப்புழுவின் முட்டை குவியல்கள்மற்றும் புழுக்களை சேகரித்து அழிக்க வேண்டும். மக்காச்சோளப் பயிரானது 40-45 நாட்கள் வளர்ந்த நிலையில், 1 ஏக்கருக்குவேப்பம்புண்ணாக்கு 100 கிலோஅடியுரமாகவும், 15 முதல் 20 நாட்களில் 1 ஏக்கருக்கு அசாடிராக்டின் 1500 பிபிஎம், குளோரான்ட்ரினலிபுரோல் 18.5 சதம் 60 மி.லி. தெளிக்கலாம். 35- 40 நாட்களில் ஏக்கருக்கு 1 கிலோ மெட்டாரைசியம் அனிசோபிலியே அல்லது எமாமெக்டின் பென்சோயேட் 5 சதம் மருந்து 100 கிராம் தெளிக்கலாம்.

இவ்வாறு ஒருங்கிணைந்த பயிர்ப்பாதுகாப்பு முறைகளை கடைபிடித்து மக்காச்சோளப் படைப்புழுவினைக் கட்டுப்படுத்திடலாம் எனவும், மேலும் கூடுதல் விபரங்களுக்குத் தங்கள் பகுதி வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தினைத் தொடர்பு கொண்டு ஆலோசனை பெறலாம் என வேளாண்மை துறையினர் ஆலோசனை தெரிவித்துள்ளனர். இதில் நாற்பதுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். வட்டார தொழில்நுட்ப மேலாளர் ராஜேஸ், உதவி தொழில்நுட்ப மேலாளர் கார்த்திகா, சதீஸ், உதவி வேளாண் அலுவலர் பொன்முடி, உதவியாளர் சாமிமுருகன் ஆகியோர் முன்னோடி விவசாயிகளை அழைத்து பயிற்சி ஏற்பாடுகளை செய்திருந்தனர்.



மண் மற்றும் விதை மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்த விதை நேர்த்தி செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

விருதுநகர் வட்டாரம், தாதம்பட்டி கிராமத்தில் மக்காச்சோள படைப்புழுவை இயற்கையாகவே கட்டுப்படுத்த டிரைக்கோகிரம்மா முட்டை ஒட்டுண்ணி குளவி வெளியிடப்பட்டது.

# தரமான மற்றும் சான்று பெற்ற விதைகள் மானியத்தில் விவசாயிகள் பெற்றிட வேளாண்மை இணை இயக்குநர் அழைப்பு

விருதுநகர், அக்.7

விருதுநகர் மாவட்டத்தில் ராபி பருவத்தில் சராசரியாக 1.01000 இலட்சம் எக்டர் பரப்பளவில் நெல், சிறுதானியங்கள் மற்றும் குறுந்தானியங்கள், பயறு வகைகள் மற்றும் பருத்தி ஆகிய பயிர்களில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. நடப்பு ராபி பருவத்திற்கு தேவையான தரமான சான்று பெற்ற விதைகள் வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் மத்திய மற்றும் மாநில திட்டங்களின் கீழ் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது என்று வேளாண்மை இணை இயக்குநர் (பொ) மு.சுமதி தெரிவித்துள்ளார்.

பெரும்பான்மையான சாகுபடி பரப்பு ராபி பருவத்திலேயே சாகுபடி செய்யப்பட்டு வருவதால் விருதுநகர் மாவட்டத்தில் இருப்பில் உள்ள நெல் 105.136 மெ.டன், சோளம் 8.165 மெ.டன், மக்காசோளம் 36.547 மெ.டன், கம்பு 1.574 மெ.டன், ராகி 0.515 மெ.டன், குதிரைவாலி 27.941 மெ.டன், வரகு 2.873 மெ.டன், திணை 0.099 மெ.டன், துவரை 2.410 மெ.டன், உளுந்து 42.432 மெ.டன், பாசிப்பயறு 4.706 மெ.டன், நிலக்கடலை 31.805 மெ.டன், எள் 2.342 மெ.டன், சூரியாகாந்தி 10.496 மெ.டன் மற்றும் பருத்தி 4.446 மெ.டன் போன்ற தரமான சான்று பெற்ற விதைகள் அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் விநியோகிக்கும் பொருட்டு வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப் பட்டுள்ளது. இவற்றில் நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள் மற்றும் பருத்தி விதைகளை 50% மானியத்தில் பெற்று பயனடைந்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

எனவே அந்தந்த வட்டார விவசாயிகள் தங்கள் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தினை அனுகி விதைகளைப் பெற்று பயனடைந்திடுமாறு விருதுநகர் வேளாண்மை இணை இயக்குநர் (பொ) மு.சுமதி தனது செய்தி குறிப்பில் தெரிவித்து உள்ளார்.